கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர் : திரு. கு. இராசாமணி, இ.ஆ.ப.,

ந.க.எண்.1737/2019/பே2 நாள் 24.09.2019

பொருள்: பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – கோயம்புத்தூர் மண்டலம் – பேரூராட்சிகளில் கீழ்நிலை பணியிடங்களில் பணியாற்றி 20 சதவீத ஒதுக்கீடு அடிப்படையில் பணி மாறுதல் மூலம் பதவி உயர்வு பெற்ற பணியாளர்கள் – தமிழ்நாடு அமைச்சுப் பணித் தொகுதியில் பணியாற்றி வருவது – பணிவரன்முறை செய்தும் தகுதிகாண்பருவம் துவங்கியும் ஆணை பிறப்பித்தல் – தொடர்பாக.

பார்வை:
1. கோட்டூர் பேரூராட்சி செயல் அலுவலரின் ந.க.எண். 352/2018/அ1, நாள்.09.09.2019.
2. காரமடை பேரூராட்சி செயல் அலுவலரின் ந.க.எண். 1/2019/அ1, நாள்.10.09.2019.
3. கூடலூர் பேரூராட்சி செயல் அலுவலரின் ந.க.எண். 480/2018/அ, நாள்.09.09.2019.
4. தாளியூர் பேரூராட்சி செயல் அலுவலரின் ந.க.எண். 419/2019/அ, நாள்.12.09.2019.
5. அன்னூர் பேரூராட்சி செயல் அலுவலரின் ந.க.எண். 403/2018/ஈ, நாள்.13.09.2019.
6. மதுக்கரை பேரூராட்சி செயல் அலுவலரின் ந.க.எண்.1/2019/அ1, நாள்.12.09.2019.
7. பூலுவப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் ந.க.எண்.194/2018, நாள்.12.09.2019.
8. ஒத்தக்கால்மண்டபம் பேரூராட்சி செயல் அலுவலரின் ந.க.எண்.1/2019/அ, நாள்.13.09.2019.

-----

**ஆணை:**

கோயம்புத்தூர் மாவட்டப் பேரூராட்சிகளில் தமிழ்நாடு பேரூராட்சி பணித்தொகுதியில் பணியாற்றி வந்த கீழ்நிலைப் பணியாளர்களுக்கு 2009–2010ஆம் ஆண்டு முதல் 2016–2017ஆம் ஆண்டு வரையில் இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் பணியிடங்களில் ஏற்பட்ட காலியிடங்களில் 20 சதவீத ஒதுக்கீட்டின் அடிப்படையில் கீழ்க்காணும் அட்டவணையில், கலம் 2இல் கண்டுள்ள பணியாளர்களுக்கு தமிழ்நாடு அமைச்சுப் பணித் தொகுதிக்குட்பட்ட வரித்தண்டலர் பணியிடங்களில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவின் பேரில், பணி மாறுதல் மூலம் நியமனம் வழங்க அனுமதித்து அரசாணை (நிலை) எண்.69, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை, நாள்.04.07.2018)இல் ஆணைப்பிறப்பிக்கப்பட்டதற்கிணங்க, தனியர்களை அவரவர் பெயருக்கெதிரே கலம் 3இல் குறிப்பிடப்பட்டுள்ள வரித்தண்டலர் பணியிடங்கள் வழங்கி கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ந.க.எண்.2155/2017/பே2, நாள்.13.07.2018 செயல்முறைகளில் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

/த.பி.பா

இதனைத் தொடர்ந்து, தனியர்கள் கலம் 4ல் கண்டுள்ள தேதிகளில் பணி மாறுதல் மூலம் நியமனம் அளிக்கப்பட்ட வரித்தண்டலர் பணியிடங்களில் இணைந்து நாளது வரை தொடர்ந்து பணியாற்றி வருவதால் தனியர்களது பணியினை வரன்முறை செய்து ஆணை பிறப்பிக்கக் கோரி பார்வை 1 முதல் 8 வரையிலான இனங்களில் சம்மந்தப்பட்ட பேரூராட்சிகளின் செயல் அலுவலர்களால் கருத்துருக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் ஆணைகளுக்கிணங்க, தனியர்கள் பணிபுரிந்து வரும் பணியிடத்திற்குரிய குறைந்தபட்ச கல்வித் தகுதியினை (10ஆம் வகுப்பு தேர்ச்சி) முழுமையாக பெற்றுள்ளதின் அடிப்படையில், தமிழ்நாடு அமைச்சுப் பணித் தொகுதிக்குட்பட்ட வரித்தண்டலர் பணியிடத்தில் கலம் 4இல் குறிப்பிட்டுள்ளவாறு தனியர்கள் பணியேற்றுக்கொண்ட நாள் முதல், தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016இல் பிரிவு 28இன்படி, தனியர்களது பணியினை இப்பணியிடத்தில் வரன்முறை செய்து இதன் மூலம் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | பணியாளரின் பெயர் (திருவாளர்கள்) | அமைச்சுப் பணித் தொகுதியில் வழங்கப் பட்ட பணியிடம் | அமைச்சுப் பணித் தொகுதியில் பணியில் இணைந்த நாள் | அமைச்சுப் பணித் தொகுதியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள். |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | தி.வேல்முருகன் | வரித்தண்டலர், கோட்டூர் பேரூராட்சி | 18.07.2018 மு.ப. | 18.07.2018 மு.ப. |
| 2 | ரா.முகமது முஜமில் | வரித்தண்டலர், காரமடை பேரூராட்சி | 18.07.2018 மு.ப. | 18.07.2018 மு.ப. |
| 3 | செ.சரஸ்வதி | வரித்தண்டலர், பெரியநாயக்கன்பாளையம் பேரூராட்சி, தற்போது பணி மாறுதலில் வரித்தண்டலர், கூடலூர் பேரூராட்சி | 18.07.2018 மு.ப. | 18.07.2018 மு.ப. |
| 4 | கி.சு.ஹரிஹர கிருஷ்ணன் | வரித்தண்டலர், இருகூர் பேரூராட்சி தற்போது பணி மாறுதலில் வரித்தண்டலர், தாளியூர் பேரூராட்சி | 16.07.2018 பி.ப. | 16.07.2018 பி.ப. |
| 5 | ச.நடராஜன் | வரித்தண்டலர், அன்னூர் பேரூராட்சி | 16.07.2018 மு.ப. | 16.07.2018 மு.ப. |
| 6 | ஆ.லட்சுமி | வரித்தண்டலர், எட்டிமடை பேரூராட்சி தற்போது மாறுதலில் வரித்தண்டலர், மதுக்கரை பேரூராட்சி | 16.07.2018 மு.ப. | 16.07.2018 மு.ப. |
| 7 | ர.புவனேஸ்வரி | வரித்தண்டலர், பூலுவப்பட்டி பேரூராட்சி | 16.07.2018 பி.ப. | 16.07.2018 பி.ப. |
| 8 | ஆ.அகிலாண்டம் | வரித்தண்டலர், ஒத்தக்கால்மண்டபம் பேரூராட்சி | 16.07.2018 பி.ப. | 16.07.2018 பி.ப. |

தனியர்களது பெயருக்கெதிரே கலம் 5இல் குறிப்பிடப்பட்டுள்ள பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து இப்பணியிடத்தில் தகுதிகாண்பருவம் துவங்கியும் இதன் மூலம் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

தனியர்களது பெயருக்கெதிரே கலம் 5இல் குறிப்பிடப்பட்டுள்ள பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் அடங்கியுள்ள ஈராண்டு காலத்திற்குள் தகுதிகாண்பருவத்தினை திருப்திகரமாக நிறைவு செய்யவேண்டும் எனவும் இதன் மூலம் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

மேற்காணும் தகுதிகாண்பருவ காலத்திற்குள், தனியர்கள் தமிழ்நாடு அமைச்சுப் பணி விதி 34 (a) பிற்சேர்க்கை V-இன்படி, பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் இளநிலை உதவியாளருக்கான அடிப்படை பயிற்சியினை நிறைவு செய்யவேண்டும் எனவும் இதன் மூலம் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

மேலே குறிப்பிட்டவாறு, தகுதிகாண்பருவம் துவங்கப்பட்ட நாள் முதல் ஈராண்டு தகுதிகாண்பருவ காலம் மற்றும் கால நீட்டிப்பிற்கு தகுதியான மூன்றாண்டு காலம் ஆக மொத்தம் ஐந்தாண்டு காலத்திற்குள் இத்தகுதியினை பெற்றிருக்காதபட்சத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016இல் பிரிவு 31 மற்றும் 32 ஆகியவற்றின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

3/4

மாவட்ட ஆட்சித் தலைவர்,
கோயம்புத்தூர்.

20/9/19

பெறுநர்
சம்மந்தப்பட்ட வரித்தண்டலர்கள்,
கோயம்புத்தூர் மண்டலம்.
(தொடர்புடைய செயல் அலுவலர்கள் மூலமாக)

20/9/19 20/9/19

நகல் :

1. பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை.
2. செயல் அலுவலர், கோட்டூர் / காரமடை / கூடலூர் / தாளியூர் / அன்னூர் / மதுக்கரை / பூலுவப்பட்டி / ஒத்தக்கால்மண்டபம் பேரூராட்சிகள், கோயம்புத்தூர் மாவட்டம் (தனியர்களுக்கு சார்வு செய்து சார்வு நகல் அனுப்பவும், பணிப்பதிவேடுகளில் உரிய பதிவுகள் மேற்கொள்ளும் பொருட்டும்)
3. பே2 இருப்பு கோப்பு.